# பிரம்மம்
## 2016



புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்ல சொற் பொருணாளும் நடாத்தவும்

எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்

வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்

வல்லபைக்குரியானை வாழ்த்துவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மம்



## புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி

### நவராத்திரி விழா

**சிறப்பு மலர் 2016**

**இடம் : கல்லூரி மேல் மண்டபம்**

**நேரம் : காலை 9.30 மணிக்கு**

**திகதி : 07.10.2016 (வெள்ளிக்கிழமை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Fr. Principal

It is with a sense of joy and pride I offer this message to the members of the Hindu Association of the College on the occasion of the publication of "Bhrammam", the magazine released annually in connection with Nawarathri vihza celebrations of our College.

During Nawarathri festival special worship is offered to the Hindu deity Durga, an embodiment of Shakthi who overcame the evils of the world. This festival is celebrated throughout the world with immense zeal and devotion.

I offer my heartiest congratulations to all members of the Hindu Association of the College for organizing this annual Nawarathri vihza Which will surely promote all precious religious value and ideals of Hinduism. Also, the efforts of the Hindu associations in this regard will also add greatly to the inter-religious culture within the College, especially because our College has always proudly maintained a culture of inter-religious harmony. I must say you have done very well to rally round the students, parents, old boys and well - wishers and their good will, generosity and support to make this memorable event a success.

With my best wishes,

Rev. Fr. Henry Bernard Wijerathna OSB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் இந்து சமய மன்றத்தினால் நடத்தப்படும் நவராத்திரி விழாவினை முன்னிட்டு வெளியிடும் பிரம்மம் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியினை அளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வீரம், செல்வம், கல்வி என்பன இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாதவை ஆகும். இம்மூன்று செல்வங்களையும் வேண்டி அம்பிகையை முறையே துர்க்கை, லக்குமி, சரஸ்வதியாக நவராத்திரி நாட்களில் முறையாக விரதம் இருந்து வழிபடுகின்றோம். தாய் அன்பிற்கு நிகரானது இவ்வுலகில் எதுவுமில்லை. இறைவனைத் தாயாக வணங்குவது இந்து சமயத்தின் மரபு. இதன்படி தேவியை சக்தியாக நவராத்திரி நாட்களில் சிறப்பாக வழிபடுகின்றோம்.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்பதற்கிணங்க, மாணவர்களே! எமக்குள் அசுரத்தன்மை காணப்படுவதால் அதன் வெளிப்பாடாக கோபம், பொறாமை, திருப்தியின்மை, அமைதியின்மை, அழிவுகள் போன்றன ஏற்படுகின்றன. இறை வழிபாட்டின் மூலம் இவ் அசுரத்தன்மையை கழுவி புனிதத்தன்மை பெற இவ்விழாக்கள் உதவுகின்றன. கல்வியின் மூலம் அறிவையும், அறிவின் மூலம் ஒழுக்கத்தையும் பயின்று இவ்வுலகில் அறவழியில் அன்பு வழி வாழ்ந்து பெருமை பெற அம்பிகையைத் துதிப்போமாக.
இவ்விழாவினை இறைபக்தியுடன் நடாத்தும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

பொ. பிரகாஷ்
பிரதி அதிபர்
(நிர்வாகத்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

வெண்டாமரை மேல் வீற்றிருப்பாள்
வீணையைக் கையில் ஏற்றிருப்பாள்
வாணி சரஸ்வதி மாதாவே - எந்தன்
வாக்கினில் வந்தருள்வாயே!

ஆயகலைகளின் அதிபதியாய் நின்று அருள் புரியும் கலைவாணிக்கு விழா எடுக்கும் இத்தருணத்தில் சைவசமய மாணவர்களின் ஆக்கங்களை ஏந்தி வெளிவிடப்படும் "பிரம்மம்" சஞ்சிகை சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சமய பாரம்பரியங்களுக்கும் விழுமியங்களுக்கும் சவால் நிறைந்த இக்காலத்தில் எமது மாணவர்களை நன்னெறிப்படுத்தி பாரம்பரியத்தை காக்கும் வகையில் இந்து மாணவர் மன்றம் தம் பணிகளில் வெற்றிகண்டு சிறப்புற வாழ்த்துவதோடு மன்றத்தின் பணிகளில் அயராது உழைக்கும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் முயற்சி திருவினையாக அன்னை ஆதிபராசக்தியை பிரார்த்திக்கிறேன்.

திருமதி. ஜெ. சேதுபதி
பிரதி அதிபர்
(இணைப்பாடச் செயற்பாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாசிரியரின் எண்ணத்திலிருந்து...

**"ஆசி நல்குவாய் அபிராமித் தாயே...."**

கண்டி மாநகரில் கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் மகாவலி நதியருகில் மாண்புடன் விளங்கும் புனித அந்தோனியார் கல்லூரியின் வருடந்தோறும் நடைபெறும் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஆசிரியர், மாணவர்கள் ஒத்துழைப்பில் மலர்ந்திடும் இனியதோர் சஞ்சிகை "பிரம்மம்". கடந்த ஆண்டுகளாக முப்பெரும் தேவியர் ஆசியோடு இனிதே வெளிவரும் இவ்விதழ் எமது கல்லூரியில் பயிலும் இந்து மாணவர்களது ஆக்கங்களைத் தன்னுள் அடக்கியுள்ளது. இச் சஞ்சிகை சிறார்களின் சிந்தனை சிதறல்களுக்கும், தேடல்களுக்கும் ஒரு களமாக அமைவதுடன் சமய விழுமியங்கள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஊட்டுவதாக அமைகின்றது.

இந்நவராத்திரி விழா மாணவச் செல்வங்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு விரதமாகவும், விழாவாகவும் அமைகின்றது. இத்தகு சிறப்புமிக்க இவ்விழாவை எமது கல்லூரி மாணவர்களது நலன் கருதி இந்து மாணவர் மன்றம் வருடந்தோறும் இனிதே நடாத்தி வருகின்றது. இவ்விழாவும் இதனூடு வெளிவரும் இவ்விதழும் இனிவரும் காலங்களிலும் மென்மேலும் சிறப்புற இறை ஆசியோடு அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்களது ஒத்துழைப்பும் ஆசீர்வாதமும் என்றென்றும் நல்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனிஅபிராமி எந்தன் விழித்துணையே"

பொறுப்பாசிரியர்

திருமதி. C. பார்த்தீபன்

இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்றத் தலைவரின் சிந்தனைத்துளிகள் ....**

புனித அந்தோனியார் கல்லூரியின் இந்து மாணவர்கள் இணைந்து வழங்கும் நவராத்திரி விழாவின் சிறப்பு அம்சமாக "பிரம்மம்" இதழ் வெளிவருகின்றது.

இவ்விழாவின் விழாத் தலைவனாக என்னுரை வழங்குவதில் பெருமிதமும் உவகையும் அடைகின்றேன். இவ்விழாவிலே காலச்சுவடாய் அமையும் இம்மலரை வெளியிட ஊக்கமளித்து வழிகாட்டிய எமது இந்துமன்ற பொறுப்பாசிரியர் திருமதி. பா. சந்திரலேகா அவர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அத்துடன் விழா மலரை வெளியிட அனுமதியளித்து ஆசி நல்கிய அதிபர் வண.பிதா. ஹென்றி விஜேரட்ண அவர்களையும், விழா சிறப்புற எம்மை வழிநடத்தி ஊக்கம் தந்த ஆசிரியர்களையும் மிக்க நன்றியுடன் நினைவு கூறுவதில் மகிழ்வுறுகிறேன்.

இன்றைய விழா சிறப்புற நிகழ அயராது உழைத்த இந்து மாணவர் மன்ற உறுப்பினர்களையும் இதழ் வெற்றிகரமாக வெளிவர வழிவகுத்த இதழாசிரியரையும் மனமாற வாழ்த்துகின்றேன்.

இவ்விழாவின் மகுடமாகும் இந்நூல் காலம் கடந்தும் பேசப்படும் ஆவணமாக இருக்கவும் இந்நூல் தொடர்ந்து மலரவும், இவ்விழா சிறக்கவும் எல்லாம் வல்ல ஆதிபராசக்தித் தாயை வேண்டுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

தலைவர்

K. ரகுராம்

இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்ற செயலாளரின் மனதிலிருந்து வரிகள் ....**

"கற்றதனாலாய பயனென் கொல் - வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

அதாவது "மெய்யுணர்வு உடையோனாகிய இறைவனின் பாதங்களைத் தொழாராயின் ஆற்றதினால் உண்டாகும் பயன் என்று கூறக்கூடியவை எவையுமில்" என்பது இதன் பொருளாகும். அக் கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாகிய இறைவனின் அருட்கடாட்சத்தைப் பெறவே எமது கல்வி சார் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

அத்தகைய இறை சக்தியே ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சக்தியாக உலகமெங்கும் வியாபித்துள்ளது. அத்தகைய சக்திக்கு விழா எடுத்து வழிபடுவது எம் இந்துமதமாகும். இவ்வாறான இந்து மதத்தினை கற்றறிந்தவன் பூரண ஒளிபொருந்தியவனாகின்றான். அவ்வகையில் சக்திக்கு சக்தி சேர்க்கும் வண்ணம் இக் கல்லூரியில் நவராத்திரி விழாவினை முன்னிட்டு 'பிரம்மம்' சஞ்சிகை இம் முறையும் வெளிவருவதில் இக் கல்லூரியும், எமது இந்து மாணவர் மன்றமும் பெருமிதமடைகிறது. அதேபோன்று இவ் இந்து தர்மத்தின் ஒரு துளியை இச் சஞ்சிகையூடாக உங்கள் முன் சமர்பிக்கிறேன்.

எம் மன்றமானது பாடசாலை மட்டத்தில் நவராத்திரி விழாவுடன் கலைத்திறன் போட்டியையும் நடாத்தி மகிழ்விக்கிறது. எதிர்காலத்திலும் இன்னும் பல நற்பணிகளை இயற்றிச் சைவமும் தமிழும் தலைத்தோங்க தோள் கொடுக்கும் என்பது எமது நம்பிக்கை.

இறுதியாக இவ்விழா சிறப்பாக நடைபெற உதவியாக அமைந்தோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

"சர்வமும் பிரம்ம மயம்"

செயலாளர்

R. நிதூஷன்

இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து ....**

அன்னையே! அருந்துணையே! அருகிலிருந்து காருமம்மா
வந்தவினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயே உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
சேயாய் உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

ஆதிபராசக்தித் தாயின் அருளுடன் ஆண்டுதோரும் அன்பர்களின் கரங்களில் தவழும் "பிரம்மம்" சஞ்சிகை இவ்வருடமும் எமது மாணவ சதோதரர்களின் கலைப்படைப்புகளை ஏந்தி வெளிவந்ததையிட்டு இந்து மாணவர் மன்றம் பெருமையடைகிறது.

இளைய மாணவர் சமுதாயத்தின் எழுத்தாக்கத் திறமைகளை வெளிக்கொணர அற்புத இதழாகிய "பிரம்மம்" வழிவகுப்பதையிட்டு இதழாசிரியனாகிய எனது மனம் பேரின்பம் அடைகிறது. எதிர்வரும் காலங்களிலும் இச்சஞ்சிகை எவ்வித குறைவுமின்றி மென்மேலும் மெருகூட்டப்பட்டு வெளிவரும் என ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இதழாக்கத்தின் குறைநிறைகளை சுட்டிக்காட்டி எமக்கு நல்வழி காட்டிய அனைத்து நல் உள்ளங்களுக்கும், சஞ்சிகையின் வெற்றிகரமான வெளியீட்டுக்கு நன்கொடை அளித்த விளம்பரதாரர்களுக்கும் ஆதிபராசக்தித்தாய் எல்லையில்லா அருளை அள்ளி வழங்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

இதழாசிரியர்
R. மதூஷன்
K. கனுஷ்கர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Message from the president of the Catholic Students' Federation*

I pen this few words to extend our heartiest pleasure to "Hindu students union " for organizing a "Navarathri Vizha" to evoke the blessings to our Alma mater and also for their commitment to fulfil the inter religious harmony in our school. I pray for the God Blessings on this "Navarathrivizha" to make it a success.

Thank you and may God Bless you all.

***Master Y.A.S.Silva***
***President***
***Catholic students' federation***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the president of the Buddhist Brotherhood

As the Buddhist association of St. Anthony's college, we would to convey our heart full wishes for the "Navarathry" celebrations which is organized by the Hindu students union of our school.

Moral and cultural development of the community can be expected through organizing such functions. So this effort of organizing "Navarathry" celebrations should be appreciated in a special way. As Buddhist we hope this "Navarathry" festival will be an occasion which unity between us as we Antonions specially may shimmer all around the world.

***Master S.Millamadittha***
***President***
***Buddhist Brotherhood***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the president of the Islamic Students Majilis

It is with great pleasure I write this message on behalf of the Islamic students' Majilis of our alma mater for the magazine, "Brammam" which is to be released by the Hindu students union on the occasion of their annual "Navarathry vizha" 2016.

I take immense pride in the fact that our school is a great example for harmonious co-operation among students of multi-cultural and multi religious back grounds.

I would like to make use of this opportunity to congratulate the Hindu students union members on their achievements and wish them all the very best for their achievements and their future endeavors.

Alhamdulillah

Master M.R.M.Shaadhir
President
Islamic student Majilis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

விநாயகர் என்ற சொல் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக் கெல்லாம் தலைவன் எனப் பொருள்படும், எந்தக் கடவுளை வழிபட்டாலும் முதலிலே வழிபடும் தெய்வம் விநாயகக் கடவுள் ஆவார். விநாயகரின் தோற்றம் பற்றி சம்பந்தரின் பின்வரும் தேவாரம் விளக்கி நிற்கின்றது.

“பிடியதன் உரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே”

மிக்க கொடையே வடிவமாக உடைய சான்றோர் வாழ்கின்ற திருவலிவம் எனும் பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், தமது சக்தியாகிய உமையம்மையார் பெண் யானை வடிவத்தைக் கொள்ள, தாம் ஆண் யானையின் வடிவம் கொண்டு, தமது பாதங்களை வழிபடும் அடியாரது துன்பங்களை நீக்கும் தன்மையுடையவராகிய விநாயகக் கடவுள் உற்பத்தி ஆவதற்கு திருவருள் புரிந்தார்.

நாம் எழுதத் தொடங்கும் முன் “உ” எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குவது வழமை. விநாயகர் ஓங்கார வடிவினர். அ + உ + ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடு எழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி ஆகும்.

மஞ்சள், சாணம், சந்தனம் முதலியவற்றால் பிள்ளையாரைப் பிடித்து வைத்தால் அவர் அனைவருக்கும் அருள் பாலிக்க எழுந்தருள்வார். விநாயகருக்கு மலர்களாக அறுகு, எறுக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரிய காந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன கூறப்படும். பத்திரங்களாக வன்னி, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி என்பன விநாயகருக்கு உரித்தான பத்திரங்கள் ஆகும். விநாயகர் எந்நேரமும், எவ்விடத்திலும், தூணிலும் துரும்பிலும் நாம் செய்யும் நன்மை, தீமை, பாவம் என்பவற்றை அவதானித்து கொண்டு எமக்கு வரும் கஷ்டங்களை தடுத்து, எமக்கு அருளுகிறார்.

(ஆக்கம் : சைவப்பெரியார் : சு. சிவபாத சுந்தரம்)

R.அகிலாஷ்
தரம் - 7[T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

# Kala Coconut Oil Stores

***N.S. Ravishankar***



*No. 12, Giranthurukotte Road,*
*Mahiyangana.*

***Tel : 055 2257618, 071 5774999, 071 829843***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ப்பொருள் நீயே

படைப்பதும் நீயே காப்பதும் நீயே
உன் அடியார்க்கு அருளுவதும் நீயே
ஆதியும் நீயே அந்தமும் நீயே
அகிலத்தை ஆள்பவன் நீயே

பாட்டும் நீயே பாவமும் நீயே
பூமியில் கேட்கும் ஓசையும் நீயே
சூரியனும் நீயே சந்திரனும் நீயே
நேத்திரம் காணும் ஒளியும் நீயே

மரமும் நீயே செடியும் நீயே
தரணியில் நிலவும் செழிப்பும் நீயே
காயும் நீயே கனியும் நீயே
அடியவர்களுக்கு உணவளிப்பதும் நீயே

நகமும் நீயே சதையும் நீயே
உலகோர் இடையில் ஒற்றுமை நீயே
கண்ணும் நீயே இமையும் நீயே
காக்கும் ஒருவன் மெய்ப்பொருள் நீயே

M. மதூஷன்
தரம் - 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

# R.S.R
# EGG DISTRIBUTION



***Katugastota Road,***
***Nawayalathanna***
***Tel: 0779143391***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகருக்கு விருப்பமான சில பொருட்களும் தத்துவங்களும்

### அறுகம்புல்

ஆறு இடங்களில் வேர்களை ஊன்றி ஒரு கொடி போல வளர்வது அறுகு அல்லது அறுகம்புல் ஆகும்.

இது குளிர்மையானது. கோடை காலத்திலும் வாடாது. இது அரிய மூலிகையாகும். அறுகம்புல்லை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் தணியும். அறுகம்புல் உடலின் எடையையும் கொழுப்பையும் குறைக்கும். நரம்புத் தளர்ச்சியையும் நீக்கும். இரத்தப்புற்று நோயை தணிக்கும். நஞ்சினை முறிக்கும். குருதிச் செங்குழியங்களை பெருக்கும். இருமல், இதயக்கோளாறு, இரத்தச்சோகை முதலிய நோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஓடி" என்பது போல் "உலகம் செழித்து வாழ வேண்டும்" என்பதைக் குறிக்க அறுகம்புல் சிறந்த வழிபாட்டுப் பொருளாக விளங்குகின்றது.

### விளாம்பழம்

விளாம்பழத்தின் புற ஓடும் உள்ளீடான பழமும் தொடர்பில்லாமல் வெவ்வேறாக இருக்கின்றன. இரண்டிற்கும் தொடர்பற்ற இந்நிலை பழம் பழுத்த பிறகு அமைகின்றது. உடலும் உள்ளமும் பக்தியில் ஈடுபடும் போது அவற்றுக்கு எந்த பந்த பாசமும், தொடர்பும், கட்டும், பற்றும் இருக்கக்கூடாது. இந்த பற்றற்ற நிலையை உணர்த்துவது விளாம்பழம்.

### மோதகம்

இதனை எருக்கலாம் கொழுக்கட்டை என்று கூறுவது வழக்கம். விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது. இது மாவுக்குள் பூரணம் வைத்து மடித்து செய்யப்படுவதாகும். (மா-உடல், பூரணம் - உயிர்). இனிமையாகவும் சுவையாகவும் எல்லோரும் விரும்பும் பொருளாக இருப்பது போல விநாயகரும் உயிருக்கு இனியவராக இருக்கின்ற தத்துவத்தை விளக்குகின்றது.

### சிதறு தேங்காய்

நேர்த்தியின் பொருட்டு தேங்காய்களை சிதறுகாய் அடிப்பது விநாயகருக்கு மட்டும் உரியது. சிதறுகாய் அகங்காரத்தின் முடிவை குறிக்கும் எனவே விநாயகருக்கு முன் அகங்கார மண்டையோடு சிதற வேண்டும், அமுதமயமான அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பன சிதறு தேங்காயின் உட்கருத்தாகும்.

R. கிதுர்ஷி பிரநீத்
தரம் - $6^D$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

Devi



# Devi Jewellers

**No. 38,**
**D.S. Senanayake Veediya,**
**Kandy, Sri Lanka.**
**Tel/Fax : 081 2224110**
**Email: devijlkandy@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீறு (விபூதி)

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் எனப்படும். சைவசமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவசின்னங்களில் ஒன்றான திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களுண்டு.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெள்ளை நிறத் திருநீறு அணியத்தகுந்தது. வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளம். வெள்ளை நிறத்திருநீற்றை அணிவதனால் எமது அகமும் புறமும் தூய்மை அடைகின்றன. இங்கே நீறாக எடுத்துக்கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும், எரிதல் திருவருள் பதிதலையும், எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர் பெரியோர். திருநீறு இரு வகையில் அணியப்படும். ஒன்று உத்தூளனம் பரவிப் பூசுதலை குறிக்கும். இரண்டாவது திரிபுண்டரம் எனப்படும். திருநீற்றை நீரிற்குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர். சமயதீட்சை பெற்றோர் மட்டுமே இவ்வாறு தரிக்க தகுதி உடையவர்கள். இவ்வாறு தரிக்கும் போது கீழ்வரும் விதிகள் கவனிக்கப்பட வேண்டியனவாகும். குறிகள் வளையாதும், இடையறாதும், ஒன்றையொன்று தீண்டாதும், அகலாதும், ஒவ்வோர் அங்குல இடைவெளியிருத்தல் போன்றவையே நியதி விதிகளாகும்.

திருநீறு அணியும் பொழுது உத்தம திக்குகளான வடக்கு முகமாக வேணும், கிழக்குமுகமாகவேணும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும். திருநீறு தரிக்கப்பட வேண்டிய காலங்களாவன சூரியோதயம், சூரிய அஸ்தமனம், நித்திரைக்கு முன்னும் பின்னும், பல்துலக்கிய உடனும், நீராடிய உடனும் பூசைக்கு முன்னும், பூசைக்கு பின்னும். உணவுக்கு முன்னும், பின்னும் கடமைகளைச் செய்யச்செல்லும் போதும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் கட்டாயமாக திருநீறு அணிதல் வேண்டும்.

ஞானாக்கினியினாலே சுடப்பட்ட பசுமல நீக்கத்தால் விளங்குஞ் சிவத்துவப் பேற்றின் அறிகுறியே திருநீறாகும். திருநீறணிவதனால் முத்தியும் சிவஞானமும் கைக்கூடுமென அருள் நூல்கள் கூறுகின்றன. "முத்தி தருவது நீறு" "போதந்தருவது நீறு" "சுந்தரமாவது நீறு" "தேசம் புகழ்வது நீறு" என்னுஞ் சம்பந்தர் திருவாக்குகளால் இதனை யாம் உணரலாம். ஒருவன் திருநீறு அணியும் பொழுது அத்திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவலிங்கமாகின்றதெனச் சைவ நூல்கள் கூறுகின்றன.

P. லோஷிதன்
தரம் - 10<sup>T</sup>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From......*

SDP KM

# D.S.P

## Kandy Marketing

Food Service Distributer for
C W Mackie PLC
Scan Products Division

- ✓ ***Sun quick***
- ✓ ***Scan Drinking Water***
- ✓ ***Scan Jumbo Peanuts***
- ✓ ***Star Brand Essence***
- ✓ ***Ocean Fresh Tuna***
- ✓ ***K V C Products***

| | |
|---|---|
| Suresh | 0773 481 418 |
| Thanushka | 0777 702 759 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமய அரும்பதங்கள் சில

ௐ சிவதத்துவங்கள் (05) - சிவம், விந்து, சதாக்கியம்,ஈசுரம், சுத்தவித்தை

ௐ அந்தக்கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

ௐ ஞானேந்திரியங்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி

ௐ கன்மேந்திரியங்கள் - கை, கால், நா, எருவாய், கருவாய்

ௐ ஐம்பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

ௐ நாற்பாதங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம்

ௐ மூவகை வினைகள் - ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம்

ௐ மும்மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை

ௐ சிவசின்னங்கள் - விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்

ௐ வித்தியா தத்துவம்- காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி

K. சசிகுமார்
தரம் 13T Arts

## வெற்றிச்சூடி

அன்பு உலகின் உடைமை
ஆணவம் உயிரின் மடமை
இன்பம் வாழ்வின் பாதி
ஈதல் மண்ணின் நீதி
உழைப்பு தருவது உயர்ச்சி
ஊக்கம் உடைமை மகிழ்ச்சி
எளியவன் எந்தையின் பிள்ளை
ஏழ்மை என்பதே இல்லை
ஐயை அருளால் போரில்
ஐவர் வென்றனர் பாரில்
ஒற்றுமை நட்பின் பலம்
ஓதல் சீடருக்கு நலம்

R. மதூஷன்
தரம் - 13T Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From......*

# S.SUBASH

முதற்தர பெறுபேறுகளுக்கு

## தரம் 10 11 (O/L)

## வணிகக் கல்வியும் கணக்கீடும்

## தரம் 12 13 (A/L)

## வணிகக் கல்வி & கணக்கீடு



**தனியார், குழு வகுப்புகளுக்கு,**

**077 38 39 128**

186, Peradeniya Road,

Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு

வெறுப்பு வேண்டாம் மனிதா
மனதை மாற்று இனிதாய்
உள்ளங்கை அளவே வாழ்நாள்
அதற்குள் உனக்கேன் அகந்தை

அகிலம் என்பது ஒன்று
இகழ்ச்சி எதற்கு இன்று
அன்பு செய்தல் நன்று
அதிலே கடவுள் உண்டு

அகவிருள் அடியோடு விலக்கு
அகத்தை நன்றாய் துலக்கு
நஞ்சை நீயும் போக்கு
நல்ல எண்ணம் பெருக்கு

மானிடப்பிறப்பு மகிமை
மனமே என்றும் முதன்மை
அன்பு கொண்டவன் உள்ளம்
ஆண்டவன் வாழும் இல்லம்

K. சுதேஷ்
தரம் - 9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

# Saratha's

Dealers in Textiles, Fancy Goods, Oilmans Goods
Jewellers & Pawn Broker



**No. 39, Matale Road, Alawathugoda**

**Tel : 066 2244876 / 081 382030**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மதமும் அறநெறியும்

"பெறுதட்கரிய பேறுகளில் மக்கட் பேறும் மிக மாண்புடையது". மக்களாக பிறந்தும் இந்து மதத்தில் வாழும் பேறு மிக அரிது. காடுகளில் போர்க்கருவிகளோடு அலைந்து திரிந்து கண்டபடி வாழ்ந்த மனிதனை நெறிப்படுத்த தோன்றியதே மதம். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் அவற்றை வழிபட ஆரம்பித்தான்.

வேதகாலம் தொடக்கம் இன்றுவரை இயற்கை சக்திகளை இறைசக்தியாக வழிபடும் மரபு நம் இந்துமதத்தில் மக்களிடையே காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு காலத்தால் தொன்மையான மதம் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சிகள் முதலியவற்றாலும் ஆராய முடிகிறது. இந்து மதம் என்பதற்கு "சனாதன தர்மம்" என்றொரு பெயரும் உண்டு. இதற்கு அழிவில்லாத அறம் என்று பொருள். மேலும் இந்து மதம் முறையே திருநெறி, அருள்நெறி, மெய்நெறி, சன்மார்க்கம் எனப் பலப் பெயர்களைக் கொண்டது.

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியாக இறைவனைக் காண்கிறது. மேலும் சமயம் என்பதற்கு "சமை" என்பது பகுதியாக உணவுகளை உண்பதற்கு சமைத்து பக்குவப்படுத்துவதுபோல இறைவனை அடைய பக்குவப்படுத்து என்பது பொருளாகும். பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து சமயத்தில் முக்கிய இடம்பிடித்துள்ளன. ஆதலால் தான் உலகில் உள்ள எல்லா சமயங்களுக்கும் தாய்ச் சமயமாக உள்ளது எனலாம். "அன்பே சிவம்" எனக் கூறும் இந்து மதம், பிறமதங்களைப் போலல்லாது அறநெறிகள் மூலம் இறைவனை அடைவதை பெருநெறியாக காட்டுகிறது.

அத்துடன் நாம் நாளாந்தம் செய்யும் கருமங்களை - செயற்பாடுகளை நித்திய கருமங்களென்னும் அறநெறிகளாக உண்மை பேசுதல், உயிர்களிடத்து அன்பு காட்டுதல், பலன் கருதா கடமை, பகைவனுக்கும் இரக்கம் காட்டல், பகிர்ந்து உண்ணல், தன்னம்பிக்கையை வளர்த்தல் போன்றவற்றையும் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி வழி, வாழ்வை எவ்வாறு செம்மைப்படுத்துகிறது என்பதை சமயக் குரவர்களும், சமயப்பெரியார்களும் அவ்வழி ஒழுகி வாழ்ந்து காட்டியுள்ளனர்.

எண்ணங்களே செயல்களாக, செயல்களே பழக்கங்களாக பழக்கங்களே வழக்கங்களாகின்றன. அதற்கமைய சிறந்த எண்ணங்களை செயல்களாக்க இந்து மத அறநெறிகள் வழிகாட்டுகின்றன.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய்க் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தோருக்கு சீவன் சிவலிங்கம்" எனத் திருமூலரும்,

"உள்ளத்தில் அடிப்படையில் தோன்றும் உய்வுகள் தெய்வத்தினால் அருளப்படுகின்றன. தெய்வத்தைப் போலவே அவை என்றும் நிலையானவை" என அர்த்த சாஸ்திரம் தந்த கௌடில்யரும் கூறியுள்ளனர். இவை உளச் சுத்தத்திற்கு வழிகாட்டுகின்றன என்றால், விரதம் இருத்தல், கள்ளுண்ணாமை, புலால் தரித்தல் போன்றவை எம் உடல்தூய்மைக்கும் வழிகாட்டுகின்றன.

மேலும் "நாமார்க்கும் குடியல்லோம்" என நிஷ்காமிய பணி மூலம் முக்தியடைந்த நாவுக்கரசர் கூறுவது போல சரணடைவோம். "அறம் செய்ய விரும்பு" என ஔவையார் கூறுவது போலவும், அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் கொண்ட திருக்குறளில் திருவள்ளுவர் கூறுவது போலவும்

"அறவாழி அந்தணன் தான் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது"

என்ற குறள் கூறும் அர்த்தத்தின்படியும் வாழ்வாங்கு வாழ்வோம். வாழ்க இந்து மதம் வளர்க அறநெறிகள்.

T. வித்யாசாகர்
தரம் - 13^T Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விவேகானந்தர் பற்றி ....

"இந்து மதத்தின் உண்மைக் கருத்துக்களை
முழுவதும் தெளிவாக சர்வ ஜனங்களுக்கும்
விளங்கும்படி வெளியிட்டு எடுத்துரைத்த
ஞானி விவேகானந்தரே ஆவார்"

- மகாகவி பாரதியார்

"சுவாமிஜியின் பொன்மொழிகளை ஆழ்ந்து
வாசித்ததால் எனது தேசப்பற்று ஆயிரம்
மடங்காக அதிகரித்துள்ளது"

- மகாத்மா காந்தி

"இவரைப்போல் ஒருவரை நீங்கள் எங்கே
கண்டுபிடிப்பீர்கள் ? அவர் எழுதியவற்றை
வாசியுங்கள். எல்லையில்லாத ஆற்றல்
பெற்றவராவீர்கள்"

- ஜவகர்லால் நேரு

"சுவாமி விவேகானந்தர் தற்போது உயிரோடு இருந்திருந்தால்
நான் அவரது காலடியில் தான் இருந்திருப்பேன்

- சுபாஸ் சந்திரபோஸ் (இந்திய சுதந்திர போராட்ட வீரர்)

"உடல் முழுவதும் மின் அதிர்வு போன்ற ஒரு உணர்வு
பெறாமல் சுவாமிஜியின் பொன் மொழிகளை என்னால்
வாசிக்க இயலாது. அந்த அனல்பறக்கும் சொற்கள் அம்
மாவீரனது உதடுகளில் இருந்து வெளிவரும் நேரத்தில்
எத்தகைய அதிர்வுகளை, எத்தகைய எழுச்சிகளை
உருவாக்கியிருக்கும் !"

- றொ மெயின் றோலண்ட் (ஃபிறெஞ்சு எழுத்தாளர்)

K. கனுஷ்கர்
தரம் - 13^T Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from



# TARAA PACK

*HIPS and PVC Sheets*

Clear Acetate Folding Boxes, Canisters, for Shirts, Sarees,
Lingerie, Soft Toys, Moulded Trays for Biscuits, Chocolates, Cakes Pastries and
Blister Packs with Edge Folding, Trays for Electronic Items and J.C

***E.B.I, Industrial Estate,***
***Pallekele,***
***Kandy***

***Tel: 081 4481227 / 0777 812980***
***Fax : 081 2420938 / 081 4481227***
***E-mail : taraapack@ispkandy.lk***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி வழிபாடு

எல்லாச் சக்திகளும் எதிலிருந்து வந்து எதில் லயிக்கிறதோ அதற்குப் பராசக்தி என்று பெயர். தேவி மகாத்மியத்தில் எல்லாத் தேவதைகளும் அவர்களுடைய சக்திகளை ஸமஷ்டி சக்தியாக பராசக்தியிடம் ஒப்புவித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பராசக்தியை பரமேசுவரி, மஹாதேவி, ராஜராஜேஸ்வரி, ஸ்ரீமாதா, லோகமாதா என்ற திருநாமங்களாலும் பிரதிஷ்டை செய்தும் பூஜை செய்தும் வழிபடுகிறார்கள். குறிப்பாக துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதியைக் கொண்டாடுவது பெருவழக்கு.

பாஹேஸ்வரி, கௌமாரி, வாராஹி, மஹாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, பிராஹ்மி, நாரஸிம்ஹி, சாமுண்டி என்ற பராசக்தியின் ஒன்பது ஸ்வரூபங்களில் ஒன்று பிரதானமாகவும் மற்ற எட்டு அங்கமாகவும் இருக்கின்றன. பராசக்திக்கு அனுஷ்டானங்கள், புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி, சோமவார விரதம், அநந்த திருதியை விரதம், ஆருத்திரா விரதம், செவ்வாய், வெள்ளிக்கிழமை விரதம், ரகசல்யாணி விரதம் முதலியனவாம்.

சிம்மவாஹனத்தில் அமர்ந்து சக்கரம், சங்கம், சூலம் முதலிய ஆயுதங்களை தரித்து துக்க நிவாரணியாகத் துர்க்கை காட்சிதருகிறாள். ராஹு தோஷம் நீங்க ராஹு காலத்தில் துர்க்கை பூஜை செய்வது வழக்கம். நன்மைகளையும் நன்மை செய்யும் எல்லாப் பொருட்களையும் அளிப்பவள். ஆயிரம் இதழ்களுடைய தாமரையில் இரு கைகளிலும் தாமரைகள் தாங்கி, அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள், பொருள் பாலிப்பவள் லக்ஷ்மி. வள்ளுவர் குறளில் இவளை "அகனமர்ந்து செய்யான் உறையும்" "மடியிலான் தாள் உளான் தாமரையாள்" என்று குறிப்பர்.

சரஸ்வதி தேவியை வாக்காணி, பிரம்மபத்தினி என்று அழைப்பர். இவள் கலைகளுடன் அறிவுக்கும் அதிதேவதை. வெள்ளைக்கலை உடுத்தி, வெண்தாமரையில் அமர்ந்து படிக மாலையும் புத்தகமும் வீணையும் ஏந்தி ஹம்ஸவாஹினியாக இருப்பவளாக இவளை தியானம் செய்வர்.

நவராத்திரி முடிவில் மிகச்சிறப்பாக சரஸ்வதி பூஜை செய்து மறுதினம் விஜயதசமி விழாவை கொண்டாடுவர்.

R. குமுதன்
தரம் - 7T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

# SHRI NADIKA

## GEM & JEWELLERY



## Shri Nadika Jewellery (Pvt) Ltd.

No. 77, Main Street, Kegalle.
Phone : 035 2231090
Fax : 35 222 3 046

## Shri Nadika Gem & Jewellery

No. 100, Colombo Street, Kandy.
Phone : 081 222 8 100 / 081 222 8 101

## Shri Nadika Silver Jewellery & Pawning Center

No. 79, Main Street, Kegalle
Phone : 035 223 1 090
Fax : 035 222 3 046

Email : shrinadika77@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

K.Krishnasamy



New Sivaram

***Manufactures of Quality Gold Jewellery***

**567/2, Peradeniya Road, Kandy.**

**Tel : 081 4936356 / 077 3525054**

Email : krisnasamyselvam48@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**

**ஏய உணர்விக்கும் என்னம்மை ~ தூய**

**உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே**

**இருப்பளிங்கு வாராதிடர்**

ஆயகலைகள் அறுபத்து நான்கும் இவைதான் ;

1. எழுத்திலக்கணம்
2. எழுத்தாற்றல் (லிகிதம்)
3. கணிதம்
4. மறைநூல் (வேதம்)
5. புராணம்
6. இலக்கணம்
7. நயநூல்
8. சோதிட சாஸ்திரம்
9. அறநூல்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. வனப்பு
18. அலங்காரம்
19. மதுரமொழிவு
20. நாடகம்
21. நடனம்
22. ஒலிநுட்ப அறிவு
23. யாழ் (வீணை)
24. குழல்
25. மிருதங்கம்
26. தாளம்
27. வில்வித்தை
28. பொன் நோட்டம்
29. தேர்ப்பயிற்சி
30. யானையேற்றம்
31. குதிரையேற்றம்
32. மணிநோட்டம்
33. மண்ணியல்
34. போர்ப்பயிற்சி
35. மல்லயுத்தம்
36. கவர்ச்சி
37. ஓட்டுகை
38. நட்புப்பிரிப்பு
39. காமநூல்
40. மோகனம்
41. வசியம்
42. இதளியம்
43. இன்னிசை
44. பிறவுயிர் மொழியறிகை
45. மகிழுறுத்தம்
46. நாடிப்பயிற்சி
47. கலுழம்
48. இழப்பறிகை
49. மறைத்ததையறிதல்
50. வான்புகவு
51. வான்செலவு
52. கூடுவிட்டு கூடு பாய்தல்
53. அதிருசியம்
54. இந்திரசாலம்
55. மகேந்திர சாலம்
56. அழற்கட்டு
57. நீர்க்கட்டு
58. வள்ளிக்கட்டு
59. கண்கட்டு
60. நாவுக்கட்டு
61. விந்துக்கட்டு
62. புதையற்கட்டு
63. வாட்கட்டு
64. சூனியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமய வழக்காறுகளும் அறிவியல் தத்துவமும்.

ஞானம், இதனை நாம் அறிவு என்போம். தற்காலக் கருத்துக்களின் படி இது இருவகைப்படுகின்றது. ஒன்று உண்மைப் பொருளைத் தேடிச் செல்லும் மெஞ்ஞானம், மற்றையது ஆதாரங்கள் மூலம் உண்மையை விளக்கும் விஞ்ஞானம். மெஞ்ஞானத்தை அடையும் வழிகாட்டியாகவே சமயம் விளங்குகின்றது. சமயமும் விஞ்ஞானமும் இரு வழிகள் என்பது பலரின் கருத்தாகும். ஆனால் சைவ சமய வழக்காறுகள் விஞ்ஞானத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்த பல அறிவியல் தத்துவங்களை தன்னுள் கொண்டுள்ளது.

நாம் நித்திரை செய்யும் திசைகளைப் பார்ப்போமேயானால் வடக்கிலும் குறிப்பாக தெற்கிலும் தலைவைத்து படுப்பதனை பெரியோர்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். காரணம் வினவினால் "அது இறந்தவரை வைக்கும் திசை" என்பர். உண்மை தான், ஆனால் அதன் உட்கருத்தோ வேறு. புவியைச் சூழவுள்ள காந்த வலைப்பின்னலானது தனது காந்த அணுக்களை வடக்கிலிருந்து தெற்கு நோக்கியே கடத்துகின்றது. இது எமது மூளையையும், உடல் வளர்ச்சியையும் தடுத்து பல கோளாறுகளை ஏற்படுத்துகின்றது என அறிவியலாளர்கள் ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டியுள்ளனர். இதுவே வடக்கு, தெற்கு திசைகளில் தலை வைத்து நித்திரை கொள்ளாததன் தத்துவம்.

"சுவாமியை ஏன் கல்லாக அமைத்திருக்கின்றார்கள்?", இக் கேள்விக்கு சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் காரணம் கேட்கப்படுகின்றது. அந்த கேள்விற்கான பதில் இதுதான். கறுப்பு என்பது ஈர்க்கும் சக்தியைக் கொண்ட நிறமாகும். கோயிலில் பூசைகளின் போது உச்சரிக்கப்படும் மந்திரங்கள், மேள, தாளங்களின் அதிர்வுகளும், தூப தீபங்களின் வெப்பமும் சக்திகளாக ஈர்க்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை என்பது தெறிக்கும் நிறமாகும். பூசைகளின் பின் பால் ஊற்றி அபிடேகம் செய்வது அந்த சக்தி பக்தர்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே. இதுவே சுவாமியை கல்லால் அமைத்ததற்கும் அபிடேகம் செய்வதினதும் தத்துவம்.

பெண்கள் நகைகள் அணிந்து கோயிலுக்கு செல்வதும் ஆண்கள் மேலாடையின்றி செல்வதும், பித்தளையால் ஆக்கப்பட்ட பூசைத்தட்டுக்களை பயன்படுத்துவதும் பண்டைய காலந்தொட்டு வழக்கத்தில் உள்ளது. இதன் அறிவியல் பிண்ணனி கோயிலை சூழவுள்ள சக்திகளை தங்கம், பித்தளை மூலம் இலகுவாக உடலினுள் ஈர்த்துக்கொள்வதற்காகவே.

உலகம் விஞ்ஞானமயமாகும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், அதனால் சமயம் கைவிடப்படுவது கவலைக்குரிய விடயமாகும். இதற்கு காரணம், விஞ்ஞானத்தின் பின்னே ஓடும் தற்கால சந்ததியினர் சமய வழக்காறுகளில் காணப்படும் அறிவியல் தத்துவங்களை அறியாமையேயாகும். மாவிலை கட்டி மஞ்சள் நீர் தெளிப்பது நோய்கள் தொற்றாமல் இருப்பதற்கும், நெற்றியில் சந்தனம் வைப்பது நரம்புகள் இணையும் அந்த முக்கிய ஸ்தானம் குளிர்ச்சியடையவும் என சகல தத்துவங்களையும் நாம் விளக்க வேண்டும். இத்தத்துவங்களை அறியாத இளைஞர்கள் இந்த வழக்காறுகளை கடமையாகவும், கேலியாகவும் நினைப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் நவக்கிரகங்களில் ஞாயிற்றுத் தொகுதியை வழிபட்ட சமயம் சைவ சமயம். இதன் ஒவ்வொரு கடைபிடிப்புக்களையும் பற்றி அறிவதும், விஞ்ஞான தத்துவங்களை அறிவதும், அவற்றை கடைபிடிப்பதும் எம் நலனிற்கும், சமயத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றும்.

P. மதூஷன்
தரம் - 11[D]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியார் கல்லூரி

## இந்து மாணவர் மன்றம்



**1st Row left to right**

Mr. R. Ravichandran, Mrs. R. Yogendran, Mrs. V. Rajaram, Mrs. M. Thilagamani, Mrs. J. Sethupathi (Deputy Principal), Mas. R. Nidhushan (Secretary) , Rev. Fr. Henry Bernard Wijerathne OSB (Principal), Mas. K. Rakuram (President) Mrs. C. Parthipan (MIC), Mrs. S. Sugirthakala, Mrs. Selvarani, Mrs. G. Selvam, Mr. Vidhyagaran

**2nd Row left to right**

M. Ginooshan, K. Kanushkar, S. Harshan, K. Sasikumar, R. Ninoshanth, P. Charukan, M.M. Stephan, S. Nirushan, R. Madhushan, S. Harees, T. Vithyashagar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் மன்றம் - 2016

**தலைவர்**
K. ரகுராம்

**உப தலைவர்**
R. நினோஷாந்த்

**செயலாளர்**
R. நிதூஷன்

**உப செயலாளர்**
P. ஷாருக்கான்

**பொருளாளர்**
S. ஹரிஸ்

**ஒழுங்கமைப்பாளர்**
T. வித்தியாசாகர்

**இதழாசிரியர்**
R. மதூஷன்

**உப இதழாசிரியர்**
K. கனுஷ்கர்

**அங்கத்தவர்கள்**
K. ஜினூஷன்
M. மார்க்
R. ஹர்ஷான்
K. சசிகுமார்
S. நிரூஷன்
V. தினோத்
P. அபிஷேக்

பொறுப்பாசிரியர் : திருமதி. C. பார்த்திபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Compliments from*

# U.D.F

## SUPER FISH

**Sujith Fernando**



## Fish Dealer Wholesale and Retail

No. 288/A, Katugastota Road, Kandy.

Tel: 081 3806585, 081 2213900, 081 4947289

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்

- பேசும் முன் கேளுங்கள், எழுதும் முன் யோசியுங்கள், செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்.
- சில சமயங்களில் இழப்புதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர்
  கற்றுக்கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.
- நோயை விட அச்சமே அதிகம் கொல்லும் !
- நான் குறித்த நேரத்திற்கு கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.
- ஒருதுளி பேனா மை பத்து இலட்சம் பேரைச் சிந்திக்க வைக்கிறது.
- சரியானது எது என்று தெரிந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதன் பெயர் கோழைத்தனம்.
- தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகிறான்.
- ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை முடிவு எடுங்கள்.
- யார் சொல்வது சரி என்பதல்ல எது சரி என்பதே முக்கியம்.
- பிறர் குறைகளை காண்பவன் அரை மனிதன். தன்குறைகளை காண முயல்பவன் முழுமனிதன்
- சொல்வது போல் செய்து காட்டுங்கள். செய்து காட்டுவதை மட்டும் சொல்லிக்காட்டுங்கள்.
- எதைச் செய்வது அரிது என்று கருதப்படுகிறதோ அதைச் செய்ய முயலுவதில் தான் வாழ்வின் சிறந்த மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது.

P. சித்தார்த்
தரம் - 07[D]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# LEADING PRODUCTS

S.M.K தேயிலை



No. 217, Parts wood, Kandapola.
Contact No: 072 6673299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் கரையாத காவியம்
## இராஜராஜேஸ்வரம் எனும்
## தஞ்சைப் பெருவுடையார் கோயில் ....

தென்னிந்திய வரலாற்றில் முதலாம் இராஜராஜசோழன் எப்படி தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி புகழ்பெற்று விளங்கினானோ, அதே போன்று இந்திய கலை வரலாற்றிலும் இடம்பெறும் விதமாக ஈடு இணையற்ற கோயிலை எண்ணினான். தஞ்சை பகுதியை வளமாக்கும் காவிரி ஆற்றின் முக்கியமான கிளை ஆறான வடவாற்றின் கிழக்குப்பகுதியில் தஞ்சை நகரில் முதலாம் இராஜராஜனால் எடுப்பிக்கப்பட்ட இராஜராஜேஸ்வரம் எனப்படும் தஞ்சை பெருவுடையார் ஆலயம் அமைந்துள்ளது. முதலாம் இராஜராஜன் கி.பி 985 முதல் கி.பி. 1014 வரை சிறப்புற ஆட்சி செய்தான். இராஜராஜேஸ்வரம் எனும் தஞ்சை பெருவுடையார் கோயிலை தனது பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1003) தொடங்கி இருபத்தைந்தாம் (கி.பி. 1010) ஆட்சி ஆண்டில் கட்டி முடித்தான் என்று தஞ்சை பெருவுடையார் கோவில் கல்வெட்டு சான்று பகிர்கின்றது.

தஞ்சை பெருவுடையார் கோயில் கிழக்கு மேற்காக 244 மீட்டர், தெற்கு வடக்காக 122 மீட்டர் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இக்கோயில் வெளிப்புற மதிற்சுவரை சுற்றி அகழி வெட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் இரண்டு வாயிற் கோபுரங்கள் உள்ளன. இவற்றில் முதலாவதாக உள்ள வாயில் கோபுரம் கேரளாந்தகன் திருவாயில் எனப்படுகிறது. இரண்டாவது உள்ள வாயில் இராஜராஜன் திருவாயில் என்று அவனது பெயரால் அழைக்கப்படுகிறது.

இக்கோயில் விமானம் உபபீடத்திலிருந்து ஸ்தூபிவரை 216 அடி உயரம் கொண்டதாகவும் 15 தளங்களையும் கொண்டுள்ளது. கருவறை, அந்தராளம் (கருவறையை ஒட்டியுள்ள மண்டபம்), அர்த்தமண்டபம், நிருத்த மண்டபம், முகமண்டபம், நந்தி மண்டபம், கோபுர வாசல், பெரிய மதிலுடன் கூடிய பிரகாரம், அம்மன், சுப்பிரமணியர், கணபதி, கருவூர் தேவர் ஆகியோருக்கு தனிச் சன்னிதானங்கள், நடராஜர் மண்டபம், அகழி ஆகிய அமைப்புகளுடன் விளங்குகின்றன.

இக்கோயிலின் விமானத்தை வெளிப்புறமாக நோக்கும் போது கருங்கற்கள் அடுக்காகத் தெரிகின்றது. ஆனால் உட்புறம் வெற்றிடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வியத்தகு கட்டடக் கலைக்கு சான்றாக உள்ளது. இக்கோயில் கருவறை இரட்டை அடுக்குகளை கொண்டு இரட்டைச் சுவர்களால் எழுப்பப்பட்டுள்ளது.

இக்கோயில் எழுப்பப்பட்டு 1000 ஆண்டுகள் நிறைவு பெற்ற போதிலும் மிகக் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இக்கோயில் தென்னிந்திய கட்டடக்கலைக்கு சிறந்த சான்றாக திகழ்கின்றது.

இந்திய அரசால் பாதுகாக்கப்பட்டு வரும் சின்னமாகவும், உலக நாடுகளின் அமைப்பான யுனெஸ்கோவால் உலக பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்ட சின்னமாகவும் திகழ்கின்றது. எனவே நாமும் தமிழன் பெருமையை பறைசாற்றும் இதனை பேணி பாதுகாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஞ்சைப் பெருவுடையார் கோயில் சிறப்புக்கள்

- இக்கோயிலின் விமானத்தின் உயரமானது 216 மீற்றர் கொண்டது. இது தமிழ் அரிச்சுவடியில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கையாக 216 எழுத்துக்களை குறித்து நிற்கின்றது.

- இங்கு கருவறையில் காணப்படும் சிவலிங்கமே உலகில் மிகப்பெரிய சிவலிங்கமாகும். இங்கு காணப்படும் ஆவுடையார் 6 அடி உயரமும் 54 அடி சுற்றளவும் கொண்டது, மேலும் 23 அரை (23½) அடி உயரம் கொண்ட லிங்கம் ஆகியன தனித்தனியே கருங்கற்களால் செதுக்கப்பட்டவை.

- கற்களே கிடைக்காத காவிரி ஆற்றுச் சமவெளிப் பகுதியில் 15 தளங்களை கொண்ட 66 மீட்டர் உயரமான ஒரு கற்கோயிலாக அமைந்துள்ளது.

- இக்கோயிலின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட நந்தி சிலையின் உயரம், அகலம் முறையே 13 அடி, 16 அடிகள் ஆகும். (இது நாயக்கர்களால் அமைக்கப்பட்டது)
- இராஜராஜ சோழனால் அமைக்கப்பட்ட நந்திக்கும் சிவலிங்கத்திற்கும் இடையேயான தூரம் 248 அடிகள் ஆகும். இது தமிழில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை குறிக்கின்றது.
- இம்மாபெரும் படைப்பானது வெறும் 7 ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ளது.
- இக்கோயிலின் கடைக்கால் வெறும் 5 அடி ஆழத்திலே அமைக்கப்பட்டுள்ளது.
- புவியீர்ப்பு மையத்தை கண்டறிந்து அதற்கேற்ப வெற்றிட அமைப்பில் கட்டப்பட்ட அறிவியல் நுட்பம் கொண்ட கோயில்
- இடைச்சிக்கல் என்றழைக்கப்படும் 80 ஆயிரம் கிலோ (80 டன்) எடைகொண்ட ஒற்றைக்கல்லை கோபுரத்தின் உச்சியில் நிறுவியமை.
- பாறையின் மேல் வரும் அழுத்தம் குறித்த சோதனைக்கு ஏற்ப நிறுவப்பட்டமை.
- முழுக்கோயிலும் ஒரே தன்மையான செந்நிறக் கற்களால் கட்டிமுடிக்கப்பட்டமை.

S. சவின்சஸ்வர்
தரம் 12T Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வழிபாடும் ஆன்ம ஈடேற்றமும்

ஆலயம் என்றால் ஆன்மா லயப்படும் இடம் என்பதே ஆகும். ஆலயத்தை நாம் கோவில் என்று கூட கூறுவோம். எமது உயிரையே நாம் ஆன்மா என்றே கூறுவோம். ஆலயத்தை நாம் பொதுவாக அவதானித்தால் வாயிற் பக்கம் விரிந்தும் உயர் பக்கம் ஒடுங்கியும் காணப்படும். அதன் அர்த்தம் ஆன்மாக்கள் ஆசையை துறந்து படிப்படியாக இறைவனை நாடுதல் என்பதேயாகும். புத்த பெருமான் தியானம் பண்ணும் போது கூட கையின் பெருவிரல் மீது ஆள்காட்டி விரலை மடித்து மிகுதி உள்ள நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் என்பவற்றை மேலுயர்த்தி வைத்தும் ஒரு முத்திரையை பிடித்து வைத்திருப்பார். அதன் அர்த்தம் விரல்களில் பெருவிரல் பதியாக, ஆட்காட்டி விரல் பசுவாக, நடுவிரல் ஆணவமாக, மோதிரவிரல் கன்மமாக, சிறுவிரல் மாயையாக உள்ளது. அதாவது பசுவானது பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை அகற்றி முத்தியின்பத்தை அடைய வேண்டும். ஆன்மா ஒன்று முத்தியின்பத்தை அடையும் கடைசி முறையே ஆலயம். அதாவது முத்தி பெறும் இடம் ஆகும். பசு என்றால் உயிர் அது ஒரு சாதுவான மிருகமாகும். எனவே அதற்கு கடமையாற்றினால் கூட முத்தியின்பம் பெறலாம் என்பதே பொருளாகும். ஆலய வழிபாட்டில் ஈடுபடும் போது மனதிலுள்ள தீய எண்ணங்கள் சிந்தனைகள் என்பவை அகன்று ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும் காரணியாக அமையும். ஆன்ம ஈடேற்றம் என்றாலே உயிர் முத்தியை பெறல் என்பதே ஆகும். நாம் கடந்த ஜென்மத்தில் செய்த பாவ புண்ணிய வினையின் பலனாகவே மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கின்றோம். அதையே சிவபுராணம் "புல்லாகி, பூடாகி, புழுவாய் மரமாகி, பல்விருகமாகி, பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் பேயாய் கனங்களாய் வல்லசுரராகி முனிவராய் தேவராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என எல்லாப் பிறப்பை பற்றியும் ஒரே புராணத்தில் கூறுகிறது சிவபுராணம்.

பிறப்பெடுத்தால் நாம் புண்ணியம் செய்ய வேண்டும் இல்லையேல் பாவம் செய்து மீண்டும் பிறப்பெடுப்போம் இறை வழிபாடு ஆலய வழிபாடு என்றவற்றின் மூலம் நாம் ஆன்ம ஈடேற்றம் அடையலாம்.

ஆலய வழிபாடு முத்தியின்பத்திற்கு வழிவகுக்கும்.

P. சதுர்ஷன்
தரம் - 08T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

*With Best Compliments from*

# SMS TRADE CENTRE

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS



#183, Colombo Street,
Kandy.

081 2205691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்துக்கொள்ளுங்கள்.

| நவகிரகங்கள் | நிவேதனம் | தானியங்கள் | பூக்கள் |
|---|---|---|---|
| சூரியன் | சர்க்கரைப் பொங்கல் | கோதுமை | செந்தாமரை |
| சந்திரன் | பால் பாயாசம் | நெல் | வெள்ளலரி |
| செவ்வாய் | பொங்கல் | துவரை | செண்பகம் |
| புதன் | புளியோதரை | பயறு | வெண்காந்தல் |
| குரு | தயிர்சாதம் | கடலை | முல்லை |
| சுக்கிரன் | நெய் பொங்கல் | மொச்சை | வெண் தாமரை |
| சனி | எள்ளுச் சாதம் | எள் | கருங்குவளை |
| ராகு | உழுந்துச் சாதம் | உழுந்து | மந்தாரை |
| கேது | சித்ரா அன்னம் | கொள்ளு | செவ்வளி |

R. விகாஸ்
தரம் - 09D

## அன்பே சிவம்

சங்கரரின் சன் மதத்தில்
தலைமை மதம் சைவமதம்
சைவத்தின் உள்ளுருவம்
செம்மை கொண்ட சிவனாவார்

அன்பென்றால் சிவனாகும்
சிவனென்றால் அன்பாகும்
அன்பென்றால் சிவன் என்று
சித்தரித்தார் திருமூலர்

தாய்ப்பன்றி இறந்த போது
தாயாக வந்து நின்று
பன்றிக் குட்டிகள் துயர்தீர்த்த
அன்புருவம் சிவனாவார்

வந்திக்கு அணைக்கட்ட
வந்தாரே கூலி ஆளாய்
அப்பரின் துயர்த்தீர்த்தாரே
அக்காவின் பக்தியாலே

ஆளடைய பிள்ளைக்கு அப்பனார்
அப்பருக்கு ஆண்டான் ஆனார்
சுந்தர மூர்த்திக்கு தோழனானார்
திருவாதவூரருக்கு காதலனானார்.

M. பவன் சாகர்
தரம் - 09T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

# Manamagal
## Fancy & Textiles

**Dealers in all kinds of Fancy,**
**Gift Items, Covering Jewellery & Indian Textiles**

**No. 612 A, Main Street, Matale.**
**Tel : 066 2222075**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தியை தடுக்கும் மும்மலங்கள்

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களாவன பதி, பசு, பாசம் என்பவையாகும். இதில் பதி இறைவனையும், பசு ஆன்மாவையும், பாசம் ஆணவம், கண்மம், மாயை என்ற மும்மலங்களையும் குறிக்கும். பதியை போலவே பசுவும், பாசமும் அனாதி. இதில் பதி முற்றறிவுள்ள பொருள். பசு அறிவித்தலால் மட்டுமே அறியும் பொருள், பாசம் அறிவித்தாலும் அறிய முடியாத பொருள் ஆகும்.

இந்த வகையில் ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்களாகின்றன. இதில் ஆணவத்தைப் பற்றி கூறும் போது இது இருள் மலம், சகச மலம், மூலமலம் என மூன்று வகைப்படும். இவ்வாணவம் இருளை விட கொடியதாகும். இருள் தன்னை காட்டும் பொருளை காட்டாது. ஆனால் ஆணவமோ தன்னையும் காட்டாது பொருளையும் காட்டாது. இந்த ஆணவம் ஆன்மாவின் அறிவை கெடுத்து இயல்பை மாற்றி முத்தியடைய தடையாக அமைகின்றது.

கன்மம், ஊழ் அல்லது வினை என அழைக்கப்படுகின்றது. கன்மமும் மறுபிறப்பும் ஒரு நாணயத்தின் இரட்டை பக்கங்களாகும். நல்ல வினைகள் செய்தால் நல்ல பிறப்பிற்கும், தீய வினைகள் செய்தால் தீய பிறப்பிற்கும் வழிவகுக்கும். முத்திக்கு வழிவகுக்காது. முத்தியை தடுக்கும் மும்மலங்களில் இதுவும் ஒன்றாகும்.

மாயை என்னும் சூட்சும பொருளானது இந்த உலகம் தோன்ற முதற்காரணமாக அமைகிறது. இந்த மாயையானது மூன்று வகைப்படும். அவையாவன சுத்த மாயை, அசுத்த மாயை, பிரிகிறுதி என்பவையாகும். இந்த மாயை மூலம் தனு, கரண, புவன போகத்தை பெற்று சிற்றறிவு பெற்றாலும் முத்தியடைய போதுமானதாக அமையாது.

இந்த ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் இருந்து விடுபட்டு நாம் முத்தியடைய வேண்டும். இதனால் தான் இந்து மதம் நாற்பாதங்களையும் குரு, லிங்கம், சங்கமம் போன்ற வழிபாடுகளையும் வலியுறுத்துகிறது.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

R. லினோஷன்
தரம் - 08[T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

**Mahesh**
**077 6149992**

# A I W A

## Video vission & Communication

*Tamil, Hindi, English, Telungu & Sinhala Films,*
*Dvd, cd, mp3, Blue ray, Games, Blank Dvd & Cd*



**230 A ½, Madawala Road,**
**Katugastota**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையின் இரகசியம்

நாம் எந்த சமூகத்தில் பிறந்துள்ளோமோ அந்த சமுதாயத்தின் லட்சியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ப நம்மை உயர்த்தவும் உன்னதப்படுத்தவும் உதவுகின்ற செயலே நமது கடமை ஆகிறது.

எந்த கடமையையும் அலட்சியப்படுத்தக்கூடாது. தாழ்ந்த வேலையை செய்வதனாலே ஒருவன் தாழ்ந்தவனாகிவிட மாட்டான். அந்த வேலைகளை செய்கிறான் என்பதை காட்டிலும் எப்படி செய்கிறான் என்பதை பொருத்தே எவனையும் மதிப்பிட வேண்டும். நமக்கென வாய்க்கின்ற கடமைகளை எப்போதும் தயாரான முழுமனதுடன் செய்து போவோம். அப்போது நிச்சயம் ஒளியைக் காண்போம். மனதுக்கு பிடித்த வேலையை பரம முட்டாள் கூட செய்து விடலாம். ஆனால் எந்த வேலையையும் முடித்து கொள்பவனே புத்திசாளி. பயன்கருதி வேலை செய்பவன் தான் தனக்கென்று வாய்த்த கடமையைப் பற்றி குறைபட்டுக் கொள்வான். ஆனால் பலனில் பற்றில்லாதவருக்கு எல்லா வேலையுமே நல்லவை தான். எனவே நீங்கள் செய்யும் எதற்கும் பாராட்டுக்களையும், பரிசுகளையும் எதிர்பார்க்காதீர். இந்த உலகில் மகத்தான மனிதர்கள் பலர் யாருக்கும் தெரியாமலே வாழ்ந்து மறைந்திருக்கலாம். பிறருடைய பாராட்டுக்கும், பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

எதுவும் வரட்டும் உலகம் இருந்தாலும் சரி அழிந்தாலும் நான் என் கடமையை மறக்க மாட்டேன். இவை தான் பெருவீரரின் வார்த்தைகள் எனது சகோதரர்களே! நாம் கடுமையாக உழைப்போமாக, உறங்குவதற்கு நேரம் இல்லை. கடமை ஒவ்வொன்றும் புனிதமானது. அதை பக்தியுடன் செய்வதே மிக உயர்ந்த வழிபாடு.

இதயத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து காரியங்களை செய்துகொண்டு மனிதர் இந்த உலகில் வாழவேண்டும். இதய பூர்வமான காரியங்களை செய்வதற்கு இறைவன் என்றும் உதவி புரிவான் .

N.K. சஜீவன்
தரம் - 08[T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

# UNION DISTRIBUTORS

**R. Pradeepkumar**



No. 26/1, Malpana Road,
Kengalla.
Phone : 0773 520623
Email: pkrraja1978@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிருள் நீங்க ...

அகன்று விரிந்த நீலவான் கடலில் இருந்து கருணையின்றி பூமியை சுட்டெரித்துக் கொண்டிருந்தான் சூரியன். குன்றும் குழியுமாய் நீண்டுகொண்டிருந்த பாதையில் சூடு தாங்காமல் தாகத்தால் தவித்த நாவுடன் மெல்ல மெல்ல வீடுநோக்கி ஊர்ந்துகொண்டிருந்தான் மாரியப்பன். உழைக்கும் தேகம், உயிர் நீங்கும் வரை ஓயாது என்பதை அவனைக் கண்டு தெரிந்துகொண்டேன்.

“என்னா மாரி! இங்க என்னா சுத்திகிட்டு இறுக்கே? அங்க உன் புள்ள பரீட்சையில பாஸ் ஆகிவிட்டதா சொல்லி ஒன்ன தேடிக்கிட்டு இருக்கான். போய் என்னான்னு பாரு...”, கங்காணியின் குரல்கேட்டதும் மாரியப்பன் புருவத்தின் மேல் கையை வைத்து “என்னா, கங்காணி அண்ணனா!.. நல்ல சேதி சொன்னீங்க. இதோ இப்பவே போறேன்....” என்று சோர்வு அகன்ற கால்களுடனும் தாகம் தீர்ந்த முகத்துடனும் வீட்டை நோக்கி விரைந்தான்.

“அம்மா.. மாரியாத்தா! நான் கேட்டதெல்லாம் என் புள்ளக்கி ஒரு நல்ல எதிர்காலத்தத்தாம்மா. என் மகன் எங்க தோத்துப்போய் சோர்ந்துருவானோ என்று பயந்துகிட்டே இருந்தேன். ஒன் அருளிருந்தா நடக்காதது எதுவுமே இல்ல தாயீ...” போகும் வழியில் மாரியப்பனின் மனம் அவனது தாய் ஆதிபராசக்தியை வேண்டிக்கொண்டிருந்தது.

மாரியப்பன் தென்னிந்தியாவின் வெல்லக்கல்பட்டியிலிருந்து தனது ஏழு வயதில் ஆங்கிலேயரால் தோட்டக்குடியிருப்புக்கு அழைத்து வரப்பட்டவன். தோட்டத்து தேயிலை தொழிற்சாலையில் எடுபிடியாக, அதாவது கைவேலைக்காரனாக ஐம்பது வருடமாக வேலை செய்து கொண்டிருக்கின்றான். ஏழு வயதில் தனது தாயைப் பிரிந்து வந்ததால் ஆதிபராசக்தியே அவனது தாயாக இத்துணை காலமும் உடனிருந்து காத்து வருகின்றாள் என அவனது மனம் எப்போதும் கூறும். இன்று அவனது மகன் பரீட்சையில் சித்தி பெற்றுவிட்டான் என்றதும் அவனது மனம் இருப்புக் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அப்பா.. நீங்க பட்ட கஷ்டத்துக்கெல்லாம் பலன் கெடச்சிருச்சுப்பா. நான் பரீட்சையில நீங்க எதிர்பார்த்த மாதிரியே நல்லபடியா பாஸ் ஆயிட்டேன். இனி நமக்கு நல்ல காலம் பொறக்க போகுதுப்பா..." மாரியப்பனை கட்டித் தழுவிய சுரேஷின் குரலில் இருள் அகன்று ஒளி பிறந்த வெற்றித்தொனி தெரிந்தது. மாரியப்பனுக்கோ பேச்சு ஏதும் வரவில்லை. அவனது கண்களில் நீர் பெருகிற்று. வழிந்தோடிய கண்ணீரில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

***

"ச்சிக்.. இங்கையும் வேலை கெடெக்கல அப்பா இதோட ஏழு இடத்துல வேலை கேட்டு பொயிட்டேன். எங்க போனாலும் படிச்ச ஸ்கூலையும், பணக்காரனா இல்லையானுத்தான் பார்க்குறான்." தரவுக் கோப்பினை வெறுப்புடன் தூக்கி எறிந்த வண்ணம் சுரெஷ் வீட்டினுள் நுழைந்தான். சுரேஷின் முகத்தில் தெரிந்த கவலையை புரிந்து கொண்ட மாரியப்பன் அவனருகில் திண்ணையில் போய் அமர்ந்தான். ஓலை விரிசல் வழியே வானத்தை பார்த்த வாறே "நானும் என்னத்தான் பண்ண? என்னூட்டு சக்தியால உன்னை சாதாரண லயத்து ஸ்கூல்லதான் சேர்க்க முடிஞ்சிச்சு" என்று கூறும்போதே மாரியப்பன் அடக்கி வைத்த அழுகை குமுறிக்கொண்டு வெளியே வந்தது.

"அப்பா, அப்பா... அழாதீங்கப்பா, நம்ம மேல எந்த குற்றமும் இல்லப்பா. இப்ப எல்லாம் காசு வாங்காம எங்கப்பா கவர்மண்டு உத்தியொகம் கெடைக்குது. எங்க பார்த்தாலும் காசுதானேப்பா பேசுது". சுரேஷின் கரம் தனது கவலையை மறந்து தந்தையின் கண்ணீரை துடைத்தது. "படிப்புக்காக நம்ம நாட்டுல ஒரு தொழில் கூடவா இருக்காது? எனக்கும் நல்ல வேலை கெடைக்கும் அப்பா கவலைப்படாதீங்க". "தங்கச்சியையும் டாக்டருக்கு படிக்கவைப்பேனப்பா, நீங்க நிம்மதியா போய் தூங்குங்க." பெற்றவன் மனதை சுரேஷின் பேச்சு சிறிது தேற்றியது.

"மாரியப்பனை படுக்கையில் கிடத்திவிட்டு, தூங்கிக்கொண்டிருந்த தங்கையின் தலையை கோதிவிட்டு தானும் ஒரு ஓரமாய் போர்வையை இழுத்து போர்த்திக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாப்புடலையா ராசா?" "வேணாம்பா, பசிக்கல..." "கவர்மண்டு வேல தான் வேணும்ணு கெடந்து சாகத் தேவயில்லையப்பா, என்ன வேலை கெடச்சாலும் பரவாயில்ல செய். உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் உழைக்கலாம் ராசா.. கவலப்படாம தூங்கு." மகனுக்கு ஆறுதல் கூறி தாலாட்டு வசனம் பேசினான் மாரியப்பன்.

"அம்மா தாயீ உன்ன நம்பித்தாம்மா இந்த உலகமே சுத்துது. என் புள்ளைக்கு படிப்புக்கேற்ற ஒரு நல்ல வேலையை நீதாம்மா தந்து காப்பாத்தனும்" தூக்கத்திலும் மாரியின் மனம் தேவியை வேண்டித் துதித்தது.

பொழுது புலர்ந்து, "போஸ்ட்...போஸ்ட்.." சுரேஷ் சுருங்கிய நெற்றியுடன் கடிதத்தை வாங்கினான். "பற்றொழில் ஆட்சேர்ப்பு, டு.. சுரேஷ் மாரியப்பன்..ப்ரொம்.. மாயன் க்ரூப் கைத்தொழில் பேட்டை" கடிதத்தை வாங்கி வாசித்தான். கருமாரியின் அருளால் காரிருள் அகன்றது.

R. மதூஷன்
தரம் - 13T Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

# MANI
## ESSENCE DISTRIBUTORS

***Dealers in Bakery & Cake Ingredients,***
***Food Service Products, Indian Food Items,***
***Confectionery raw materials & All kind of Essence.***



No. 03, Kumara Veediya,
Kandy.

Tel : 081 2204555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

மருந்தே ஆயினும் விருந்தோடு உண்

மாரி அல்லது காரியம் இல்லை

மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை

மீகாமன் இல்லாத மரக்கலம் ஓடாது

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு

மேழிச் செல்வம் கோழை படாது

மொழிவது மறுக்கின் அழிவது கருமம்

மோனம் என்பது ஞான வரம்பு

வளவன் ஆயினும் அளவறிந்து அழித்துண்

வானம் சுருங்கின் தானம் சுருங்கும்

விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்

வீரன் கேண்மை கூர் அம்பாகும்

உரவோர் என்கை இரவாது இருத்தல்

ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை

வைகல் தோறும் தெய்வம் தொழு

ஒத்த இடத்து நித்திரை கொள்

ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்

A. பாஸ்கர்
தரம் - 12$^{T}$ Sci

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

**A/L 2017 2018**

# Maths and Science Stream Classes

**Chemistry** - Mr. P. Rajkumar B.Sc, PGDE

**Physics** - Mr. P.Kajan B.Sc, (Hons)

**Biology** - Mr. A.Chithrakumar B.Sc

**Com.Maths** - Mr.S.Mangaleshwaran

***Group Class & Individual Classes***

(Revision & Paper Class)

Place **CSC**

(Front of Vihara Mahadevi girls collage, Kandy)

Contact No.

**077 3637431**

**077 6917481**

**077 2003080**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மதத்தின் சிறப்புகளில் சில

மதங்கள் அனைத்தும் மனித வாழ்வைப் பண்படுத்தி அவனை நல் வழியில் அழைத்துச் செல்வனவே. உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஏதொ ஒரு மார்க்கத்தைப் பின்பற்றியே வாழ்கிறான். மதமில்லா மனிதனின் வாழ்வு சிதைந்து சீர் கெட்டுப் போய்விடும். சீரும் சிறப்பும் மிக்க வாழ்வுக்கு மதமே மூல காரணம். அத்தகு மதங்கள் இன்றைய உலகில் எத்தனையோ உண்டு எனினும் இந்து மதத்தின் சிறப்பு தனித்துவமானதே.

இந்து மதத்தின் முதற் சிறப்பு அதனது தொன்மை எனலாம். இந்து மதம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறியவர் யாரும் இல்லை. அது யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுவாரும் இல்லை.

யாரையும் கட்டாயப்படுத்தியோ போர் தொடுத்தோ பரப்பப்படாத மதமும் இந்து மதமே. சகிப்புத்தன்மையையும் சமாதானத்தையும் போதிக்கும் மதமாகவும் "இயற்கையாய்த் தோன்றியவற்றுள் இழி பிறவி என்று ஏதும் இல்லை" என்ற உண்மையை உணர்த்தும் மதமாகவும் இந்து மதம் சிறப்புப் பெறுகிறது.

உதாரணம் : மரம் (விருட்சவழிபாடு), கல் (கடவுளின் உரு), காற்று (வாயுபகவான்), நீர் (கங்கை), குரங்கு (அனுமன்), நாய் (பைரவர்), பன்றி (வராகம்) என இயற்கையில் இறைவனைக் காட்டி நிற்கும் மதமே இந்து மதம்.

இந்து மதத்தின் புனித நூல் என ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட முடியாதபடி பல்வேறு புனித நூல்களைத் தன்னுள் அடக்கியதும் இந்து மதம் ஒன்றே. கடமையின் முக்கியத்துவத்தை உணர்த்த பகவத்கீதை, பன்னிரு திருமுறைகள், ஆகமங்கள், உபநிடதங்கள், சித்தாந்த சாஸ்திரங்கள் எத்தனை எத்தனை ...

இன்றைய விஞ்ஞானமும் விஞ்ஞானிகளும் கூறும் வியக்கத்தகு அறிவியல் பூர்வமான விடயங்கள் பலவற்றை முன்பே கூறிவைத்த மதமும் இந்து மதமே. மெய்ஞானிகளால் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்திலுமே விஞ்ஞானம் புதைந்து கிடக்கின்றது.

இந்து ஆலயங்கள் மனிதனுக்கு உடல் உள ஆரோக்கியத்தை வழங்கும் சிறந்த மருத்துவமனைகளாக விளங்குகின்றன. முறைப்படியான ஆலய வழிபாடு உடல் உள நிலையைச் சமப்படுத்தி அழுக்குகளை வெளியேற்றிச் சக்தி கொடுக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து ஆலயங்களின் இன்றும் ஓர் சிறப்பு மிக உயரமான கோபுரங்களைக் கொண்டிருத்தல். கோபுர உச்சியில் தங்கம் அல்லது வெள்ளி அல்லது ஐம்பொன்னாலான கலசங்கள் உண்டு. இக் கலசங்களுக்குள்ளும் அவற்றின் அடியிலும் தானியங்கள், உலோகங்கள் வைக்கப்படுகின்றன. இதனால் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தி கொண்டவையாக இக் கலசங்கள் அமைந்து விடுகின்றன. ஊர் நடுவே உள்ள ஆலயம் அதனைச் சூழவுள்ள மக்களை மின்னல், இடி தாக்கத்திலின்று பாதுகாக்கும் இடிதாங்கியாகவும் அமைந்துவிடுகிறது.

திருமாலின் தசாவதாரம் இன்றைய விஞ்ஞானிகளை இன்னும் வியப்பில் ஆழ்த்துகிறது. உயிரியல் பரிணாமவியல் கொள்கையோடு தசாவதாரம் கருத்தியல் பிசகாமல் ஒத்துப் போவது ஆச்சரியமான விடயமே.

விஞ்ஞானத்தின் விந்தையையும் தாண்டிய மெய்ஞானத்தை தன்னுள் கொண்டிருத்தலாலேயே இன்று உலக நாடுகள் பலவற்றிலும் இந்து மதம் வேரூன்றிக் கிளைபரப்பி வருகின்றது. உதாரணம் : அமெரிக்காவில் 2.4 மில்லியன் இந்துக்கள் வாழ்கின்றனர் என ஒரு ஆய்வு குறிப்பிடுகிறது.

சிந்தனா அமைப்புகள், அழகுமிக்க கலைகள் மற்றும் கட்டுமானம், மக்களின் நெகிழ்வு ஆகிய ஆழமான கூறுகள் இந்து மதத்துள் அடங்கிக் கிடக்கின்றமை ஓர் சிறப்பு. அத்தோடு மத ரீதியான ஆக்கிரமிப்புக்கள் மற்றும் முழு அழிப்பு வரலாறுகள் பழமையான பல மதங்களைத் துடைத்து ஒழித்த போதும் இந்து மதம் மட்டும் அதை எதிர்கொண்டு இன்னும் வாழ்ந்து கொண்டு இருப்பதும் இந்துமதத்தின் தனித்துவமே.

இந்துமதத்தின் சிறப்புகள் எத்தனை... எத்தனை... இவை சில துளிகள் மட்டுமே. இத்தகு சிறப்புமிக்க மதம் எங்கள் மதம் என்பதில் ஒவ்வொரு இந்துவும் பெருமை கொள்ள வேண்டும்.

வாழ்க இந்து மதம்
வளர்க அதன் புகழ்

செல்வி. K. தமிழரசி
தமிழ் ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை வளப்படுத்தும் சமயம்

வாழ்க்கை என்பது "வாழ்" எனும் சொல்லின் அடியாகப் பிறந்தது. வாழ் என்பதன் பொருள் என்றும் நன்றாயிரு என்பதாகும். ஒருவன் என்றும் நன்றாயிருக்க நன்னெறிகளைக் கடைபிடித்து வாழ வேண்டும். அத்தகைய நெறிகளைப் பின்பற்றி வாழ்விற்கு வழிகாட்டியாக அமைவது சமயம் ஆகும். எப்படியும் வாழலாம் என்றிராமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்க்கை நெறியை போதிப்பதும் சமயம் ஆகும். வாழ்க்கைக்கு வரம்பிடுவதில் சமயம் முன் நிற்கின்றது. மனிதனை மிருகத்தினின்று வேறுபடுத்தி பண்பட்டவனாக வாழ வழி காட்டுவது சமயமாகும். "சமயம் மனிதனின் வாழ்வு, ஆன்மாவின் ஒளி : உலகில் வாழும் மார்க்கங்களுக்கு தீபம் ; மனிதனின் இலட்சியமாய், சத்தியத்தின் உயிர்நாடி ; வாழ்வின் பேரின்பம் : அமைதியின் நித்தியத்தின் பூரணத்துவம் என போற்றப்படுகின்றது. எமது நினைவுகள், சிந்தனைகள் அங்குமிங்கும் அலை பாயக்கூடியது. அத்தகைய மன ஓட்டத்தை நிலைப்படுத்தி மக்களை நெறிப்படுத்துவதே சமயத்தின் நோக்காகும். மனதை அடக்க வேண்டுமென்ற சிந்தனையையும் சேர்த்து அடக்குவதாகும். இம் மனவடக்க முயற்சியினை இறை வழிபாட்டினூடாகவே நிறைவேற்ற முடியும். எல்லா மானிடரிடமும் தெய்வீகம் உறைகின்றது. மானிட உடல் இறைவனின் ஆலயம். இதனை இருளில் வைத்திருத்தலாகாது. அதனுள் அறிவுச்சுடரை ஏற்றி அஞ்ஞானம் என்ற இருளை நீக்க வேண்டும். அத்தகைய அறிவு விளக்கே கல்வியாகும். கல்வியே தெய்வீகமானது. அதனூடாகவே ஞானோதயம் பெற வேண்டும், என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

கடவுளை காட்டுவதை விட கடவுள் தன்மையை மனிதனிடம் படைக்கவே சமயங்கள் தோன்றின. நல்லொழுக்கமே கடவுள் தன்மையை வளர்ப்பது. ஒழுக்கமே உயிர், பொய்தீர் ஒழுக்க நெறியே சமயம். அந்நெறி நிற்பதே சமய வாழ்வு. அதுவே இன்ப வாழ்வு. இத்தகைய இன்ப வாழ்வை ஒருவன் பெற உறுதுணையாவது சமயம். பிறப்பிலிருந்து இறப்பு வரை மட்டுமல்ல அவற்றையும் கடந்து புல்லாய், பூண்டாய், புழுவாய், மரமாய், பல்விருகமாய், பாம்பாய், பறவையாய், மனிதராய், தேவராய், பூத கணங்களாய் எல்லாப் பிறப்புக்களுக்கும் மனித வாழ்வை நெறிப்படுத்துவது சமயமாகும்.

மதம் மனிதனுக்காக படைக்கப்பட்டது. மனிதன் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு" கடைபிடிக்க வேண்டிய வழிவகைகளை கருப்பொருளாகக் கொண்டு மனித மேம்பாட்டிற்கு என தோன்றியவையே மதங்களாகும். மனிதப்பிறவி எய்தியதன் பலன் பற்றி கூறி மனிதனை நல்வழிப்படுத்தி ஆத்ம ஞானத்தை அடைய வழி காட்டுவதே சமயமாகும். பல்வேறு சமயங்களும் மக்களுக்கு ஆத்ம ஞானத்தையே போதிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்கள் வேறுபடலாம். அவற்றின் இடைக்கருத்துக்கள் முரண்படலாம். ஆனால் எல்லா மதங்களும் முடிவில் ஒரு பொருளையே சுட்டி நிற்கின்றன. அதுவே "கடவுள்" என்கிறோம். மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி உலகத்தையே தோற்றி இயக்குகின்றது. அது எல்லா இயக்கங்களையும் நெறிப்படுத்தும் சக்தி, ஊனக்கண்ணினால் காண முடியாத அச்சக்தியே கடவுள் என்கிறோம். மக்கள் பேசும் மொழி பல வேறாக இருக்கலாம். ஆனால் சமயம் ஒன்றில்தான் சமயம் வளரும் போது கலாசாரமும் வளர்கின்றது.குறிப்பிட்ட சமயத்தை பின்பற்றுவோருக்கு குறிப்பிட்ட கலாசாரப் பண்பாடுகளுமுண்டு. ஒரு சமயத்தின் வளர்ச்சியும் உறுதித்தன்மையும் அச்சமயத்தின் கருத்துக்கள், வழிகாட்டல்களில் தான் தங்கியுள்ளன. உறுதியான சமய நெறிக்கு சிறப்பான நலனோடு இணைந்து செல்ல வேண்டும். சமயத்தையும் வாழ்வையும் தனித்தனியே நோக்கமாக கருத முடியாது. சமூகத்தின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் முதன்மையாகக் கொண்ட வகையில் சமயம் வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்றல் வேண்டும். அன்றேல் ஆத்மீக உணர்வையும் நெறிமுறைகளையும் ஒழுக்க விதிகளையும் உதாசீனம் செய்யும் சமயமும், சமுதாயமும் நிலையற்றுப்போகின்றன.

சைவ, வைணவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நிலைகளிலே அவ்வவ் கடவுளரை தமிழ்மொழியில் ஆண்டவன், இறைவன், தேவன், பிதா, தந்தை என வழங்குகின்றனர். சமயமும், மொழியும் ஒன்றில் மற்றொன்று தங்கி நிற்பதால் சமயம் மொழி வளர்ச்சிக்கு உதவுகின்தெனலாம். சமயம் ஒழுக்க நெறிகளையும், சமூகப்பெறுமானங்களையும் கொண்டது. தமிழிலே காணப்படும் அறநூல்கள் இவ்வுண்மையை வலுப்படுத்தி நிற்கின்றன. இங்கு அறம் என்பது அவ்வச் சமயங்களின் நம்பிக்கை, சடங்கு, உலக நோக்கு ஆகியவற்றிற்கேற்ப அறப்பெறுமானங்களை வற்புறுத்துகின்றன. திருக்குறளில் தனி மனித நிலை என்ற ஒரு சமூக நோக்கை கொண்டதால் உலகத்தவருக்கெல்லாம் பொது மறையாகத் திகழ்கின்றது. இதே போன்று இந்துக்களின் சிந்தனைச் சிகரமாக விளங்குகின்ற உபநிடதங்கள் சிறந்த ஒழுக்கவியல் கருத்துக்களை கொண்டுள்ளன.

உபநிடதங்கள், சமுதாயத்தில் நற்பிரஜையாக வாழ்வதற்கான அறிவுரைகள், மெய்ஞ்ஞான அறிவைத் தரும் கருத்துக்கள் யாவற்றையும் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பிறவியின் பயனை அடையாமல் திசை மாறிச் செல்கின்ற ஆன்மாக்கள் 'நான்' என்ற அகங்காரமும், 'எனது' என்ற செருக்கையும் மேலோங்க செயற்படுகின்றன. உலகில் நாம் காணும் பொருட்கள் யாவும் பொய்யானவை. அவையெல்லாம் மாயை. அன்றோ, இன்றோ அழியக்கூடியவை. அழியாப்பொருள் பேரின்பமான இறைவன். அப்பேரின்பத்தை அடையும் வழிகளை சமய நூல்கள் எடுத்தியம்புகின்றன. இதை விடுத்து பொய்யான இன்பங்களைப் பெற பொய்யான நெறியில் செல்லும் ஆன்மாவின் இயல்பானது 'நிறைந்த நன்னீரில் நிற்கும் ஒருவன் நீர் வேட்கையால் நாவரண்டு நிற்றல்' போன்றது. 'பொழுது புலர்ந்த பின்பும் இருளிலே தடுமாறுதல்' போன்றதுமான நிலையாகும்.

எனவே உண்மை, அன்பு, தர்மம், ஏழைகளுக்கு உதவுதல், பொறுமை, சாந்தம், இறைபக்தி போன்ற உயர் விழுமியங்களையுடைய மனிதன் மக்களை வளப்படுத்த வேண்டும். சமயத்தின் பால் வழிப்படுத்த வேண்டும். சமயம் வேறு வாழ்வு வேறல்ல. சமயத்தை வாழ்வுடன் இணைத்து மானுட சமுதாயம் உப்பறியும் பொருட்டு உழைக்க வேண்டும்.

உலகில் வாழும் உயிர்கள் நன்மை பெற வேண்டுமென நினைத்து செயலாற்ற வேண்டும். அப்போதுதான் சமயம் வளமான வாழ்விற்கு வழி வகுக்கும்.

"சிந்திப்போம் செயற்படுவோம்
எம்மதத்தையும் வளப்படுத்துவோம்"

திருமதி. S. சுதிர்த்தகலா
தமிழ் ஆசிரியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

# MARIE'S

## Timber Depot & Hardware

*Dealers in all Kind of Imported, Local Timbers of Building Constructions Materials*



No. 42, 4th Street, Maskeliya.
Tel/Fax: 052 2277338

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வாழ்வின் தத்துவம்

இறைவன் இருக்கின்றாரா இல்லையா? இதில் என்ன சந்தேகம். அவன் இல்லையேல் அணுவும் அசையாது. கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார். அவரை எம் ஊனக் கண்களால் பார்க்க முடியாது. அகக்கண்ணால் மட்டுமே பார்க்க முடியும். அவர் என்னிலும் உள்ளார், உங்கள் உள்ளும் இருக்கிறார்.

"நட்டகல்லைத் தெய்வம் என்று நாலு புஸ்பம் சாத்தினால் நட்ட கல்லு பேசுமோ நாதன் உள்ளே இருக்கையில்" நாதன், அவன்தான் இறைவன். எம் உள்ளேதான் இருக்கிறான். எனவே அவரை எங்கும் தேடவேண்டியதில்லை. அவன் எம்முள்ளே இருப்பதால் உள்ளத்தையும் உடலையும் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம். அதற்கு யோக மார்க்கமே சிறந்தவழி.

## ஆண்டவனை அடையும் மார்க்கங்கள்

ஆண்டவனை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்கள் உண்டு. இதில் யோகமார்க்கம் மூன்றாம் இடத்தை வகிக்கின்றது. யோகத்தில் எட்டுவகை. அதில் 3ஆம் படி யோகாசனம். யோகாசனத்தில் அட்ட யோகங்கள் அடங்கும். அவை எம்மைத் தெய்வ நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியன. அவையாவன:

**இயமம்** : யாருக்கும் இம்சை புரியாமை, சத்தியத்தைக் கடைப்பிடித்தல், களவு செய்யாமை, புலன்களை அடக்குதல், பொருளாசை இன்றி வாழ்தல்.

**நியமம்** : உடலும் உள்ளமும் தூய்மையாயிருத்தல், வேதமோதல், இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல்.

**ஆசனம்** : தியானத்திற்கும், உடல் தூய்மைக்கும் உட்காரும் முறை

**பிராணாயாமம்** : ஜீவசத்தியை ஒழுங்காகக் கடத்துதல்

**பிரத்தியாகாரம்** : மனதை பிற பொருட்களில் செல்லவிடாது நிறுத்துதல்.

**தாரணம்** : மனதை ஒருவழிப்படுத்தல்

**தியானம்** : ஒன்றையே சிந்தித்தல்

**சமாதி** : நனவு நிலைக்கு சாந்தமான நித்திரை இவ்வட்ட யோகங்களையும் அவற்றின் பயனையும் ஆலய தரிசனத்தின் மூலம் இலகுவாகப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலகமிடல் (பொட்டு)

தமிழர்கள் நீராடிய பின்பும், கோவிலுக்குச் செல்லும் பொழுதும், விழாக்களின் போதும் திருமணத்தின் போதும் திலகமிட்டுக்கொள்வர். இது அவருக்கும் அவரைச் சூழ உள்ளவர்களுக்கும் புனித உணர்வைத் தூண்டுகின்றது பொதுவாக திருமணமான பெண்கள் நெற்றியில் குங்குமம் இட்டுக்கொள்வர். வெண் சந்தனம், மஞ்சள் சந்தனம், சிவப்புக் குங்குமம், போன்றவற்றை அவரவர் வர்ணங்களுக்கு ஏற்ப விருப்புக்கேற்பவும் அணிவர். நம் உடலில் நெற்றி, புருவம் ஆகிய பகுதிகள் மின்காந்த அலைகளாகச் சக்தியை வெளிப்படுத்துகின்றன. இதன்போது சிரசுடன் சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. நெற்றியில் திலகமிடுவதால் இப்பகுதியில் ஏற்படும் வெப்பத்தை அகற்றி குளிர்மைப்படுத்தி முகத்திற்கு வசீகரத்தையும் கொடுக்கின்றது.

## தீபம் ஏற்றுதல்

வீடுகளில் காலையிலும் மாலையிலும், சில வீடுகளில் அணையாத தீபமாக நாள் முழுவதும், மங்கள கரமான நிகழ்வுகள், பண்டிகைத் திருநாட்களிலும் கோவில்களில் பூஜை போன்றவற்றின் போதும் தீபம் ஏற்றப்படுகின்றது.

ஒளி அறிவைக் குறிக்கும். இறைவன் அறிவுமயமானவன். அஞ்ஞான மெனும் இருளகற்றி மெஞ்ஞானமெனும் அறிவொளியைத் தந்து நிற்பவன். ஒளியூட்டுபவன் இறைவனாக இருப்பதால் ஒளியை இறைவனாகவே கருதி தீபம் ஏற்றி வணங்குகின்றோம்.

## நோன்பு நோற்றல்

எல்லா மதத்தவர்களும் தத்தம் மதக்கோட்பாட்டின்படி நோன்பு நோற்கின்றார்கள். எல்லாவற்றிலும் அடிப்படையில் உணவை ஒறுத்தல் கடைப்பிடிக்கப்படுகிறது. விசேடமாக இந்துக்கள் கந்தசஷ்டி, நவராத்திரி, கௌரிவிரதம் போன்றவற்றை மிகப் புனிதமாக அனுஷ்டிக்கின்றனர். பாலும் பழமும் பருகுதல், ஒருவேளை உணவு, மூன்று மிளகும் மூன்று மிறடு தண்ணீரும் அருந்துதல், உணவோ நீரோ உட்கொள்ளாதிருத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கின்றனர்.

இப்படியாக நோன்பு மேற்கொள்வதால் விஞ்ஞான ரீதியாகவும் உடல் பயனடைகின்றது. இறைவனை மகிழ்விக்கவும், சுய கட்டுப்பாட்டுக்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பை மேற்கொள்கின்றனர். எம் வாழ்க்கையில் பெரும்பகுதி உணவுடன் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது. உணவு தேடுதல், சமைத்தல், உண்ணல், செரிமானமடைதல் போன்ற செயற்பாடுகளுக்கு அதிக நேரம் செலவாகின்றது. சில உணவு வகைகள் உடலுக்கும் உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பனவாக உள்ளன.


இலகுவில் சமிபாடடயக்கூடிய சத்தான உணவுகளைக் குறைந்த அளவில் உட்கொள்வதாலும் எதையும் உண்ணாதிருப்பதாலும் மனம் தூய்மை பெற்று ஒருமுகப்படுகின்றது. இது ஒருவர் தனக்குத்தானே விதிக்கும் கட்டுப்பாடு என்பதால் மகிழ்ச்சி கிடைக்கிறது. உடலின் எந்த உறுப்புக்கும் ஓய்வு தேவை. இதனால் ஜீரண உறுப்புக்கள் தம்மைப் புதுப்பித்துக்கொள்ள நேரம் கிடைக்கின்றது. இத்தகைய அளப்பெரிய நன்மைகள் விரதம் இருப்பதால் கிடைக்கின்றது.

எனவே சைவராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் எம்மதத்தின் விழுமியப்பண்புகளைக் கடைப்பிடித்து நல்மார்க்கத்தில் சென்று முத்தியெனும் பேரின்பத்தை அடைவோமாக.

திருமதி.C. பார்த்திபன்
இரசாயனவியல் ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

# Easwaran

## Book Shop



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்திக்கரம் நீட்டிய உள்ளங்களுக்கு ...

→ எம் எளிமையான இவ்விறைபணியை குறைவின்றி அரங்கேறச் செய்த இறைவனுக்கும், இந்த நவராத்திரி விழாவை மனம் கோணாது நடாத்த வாய்ப்பளித்த வணக்கத்துக்குரிய பிதா. அதிபர். ஹென்றி பேனார்ட் விஜேரத்ன அவர்களுக்கும்.

→ எமது விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்று தம் பொன்னான நேரத்தை எமக்காக அருளிய, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞான விரிவுரையாளரான கௌரவ. திரு. K. சர்வேஷ்வரன் ஐயா அவர்களுக்கும்.

→ உரிய நேரத்தில் பலமாக நின்று எம்மை வளப்படுத்திய இந்து மன்ற ஆசிரியர்கள் அனைவருக்கும், ஏனைய தமிழ் பிரிவு ஆசிரியர்களுக்கும், சகோதர மொழி ஆசிரியர்களுக்கும்,

→ 'பிரம்மம்' என்ற இச்சஞ்சிகை உங்கள் கரங்களை வந்து சேர உதவிய நிதியுதவியாளர்களுக்கும்.

→ மற்றும் இதன் உருவாக்கத்தில் பதிப்பிற்கு உதவிய "டயனமிக் அச்சக" அன்பர்களுக்கும்,

→ ஆக்கங்களை தந்துதவிய சக மாணவர்களுக்கும், இவ்விழாவினை சிறப்புற நடாத்தி, கண்ணுக்கு விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளை கொண்டு விழாவை அலங்கரித்த மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், ஏனைய மன்றங்களுக்கும், தம் நல்லாசிகளை வழங்கிய பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் ஏனைய தோள் கொடுத்த உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.


இதழாசிரியர்
R. மதூஷன்
K. கனுஷ்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Ragu | Charu | Yoosuf |
| Madhu | Nino | Jude |
| Vithya | Nidhu | Dilu |
| Naresh | Niru | Franklin |
| Kanu | Kalu | Roy |
| Yusri | Dinoth | Sagaran |
| Kevin | Abishek | Shadhir |
| Cheenu | Harees | Jehan |
| Mark | Sasi | Paul |
| Bevan | Inshaf | Niro |
| Monfort | Shaheed | Rizly |
| Sazeem | Aadhil | Sajeed |

# 2017 A/L Survivors

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org